தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை 27-4-57 சனிக்கிழமை | இதழ் 32

திருக்கடவூர் திருவாசகம்!

குழந்தைகளைப் பெருக்கி அவர்களுக்கு அரசாங்கமே கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்கிறது **ரஷ்யா!**

திறன் மிகுந்த ஆட்சி உருவாக, வளமான வாழ்வு பெறுக கல்வி நிலை உயரவேண்டும்; அறிவு வளர்ச்சி பெற்றிருக்கும் இடத்தில்தான் உண்மையான ஜனநாயகத்தைக் காணமுடியும்; வாக்குப்பெட்டிகளில் அடையாளச் சின்னங்களுக்குப் பதிலாக, அபேட்சகர்களின் பெயர்களைத்தான் பொறிக்கவேண்டும் என்கிற அளவுக்கு எந்த நாட்டில் கல்வி வளம்பெற்றிருக்கிறதோ அந்த நாட்டில்தான் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் நிர்வாகிகளைக் காணமுடியும் என்கிறது **பிரிட்டன் தேசம்.**

''மத சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டுக்கிடந்த நாங்கள் ஆர்ந்தெழுந்து அந்தப் பட்டுத்திரைகளைக் கிழித்தெறிந்த பிறகுதான், வையகத்தில் கோபுரத்துக் கலசங்களாக வீற்றிருக்கும் குபேர நாடுகளை ஏறிட்டுப் பார்க்கமுடிந்தது!'' என்கிறார்கள் **துருக்கியர்கள்!**

அகிலத்தைக் கூட விலை கொடுத்து வாங்கிடக்கூடிய வசதிபெற்ற **அமெரிக்கா,** ''எங்களை அடிமைப்படுத்திக்கொண்டிருந்த தேம்ஸ் நதிக்காரர்களை எதிர்த்திடும் ஆற்றல், அறிவு வளம் எங்களிடமிருந்ததால்தான் நாங்கள் தனி நாட்டையே நிர்மாணிக்க முடிந்தது'' என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இங்கென்ன நிலை?

கனி தரும் சுவைமிகுந்த சாற்றினைப்பற்றி காசினியோர் புகழ்ந்துகொண்டிருக்கும்போது, ஆலமரத்து விழுதோரத்தில் ஆறடி நீளமுள்ள புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, ''மாங்கனியா? அது தீது! மாந்தம் விளைவிக்கக்கூடியது; மானிடர்காள் எச்சரிக்கை!'' என்று ஒரு அன்னக்காவடி உபதேசித்தால் அது எவ்வளவு கேலிக்குரியதோ அதைப்போல ''அறிவு தீதுபயக்கக்கூடியது; விஞ்ஞானத்தால் விபரீதங்கள் விளைகின்றன. இதற்கு எவ்விதம் தீர்வு காணுவது? ஆத்மீக உணர்ச்சி வளரவேண்டும்''— என்று உபதேசிக்கிறார்கள்.

அறிவு வளர்ச்சியால் ஏற்படும் தீங்கினைத் தவிர்க்க ஆத்மீகம் வளரவேண்டுமாம்!

அறிவின் சாதனைகளால் தான் தீமைகள் விளைகின்றனவா? கற்றறிந்தவர்கள் அத்தனை பேருமே தங்களின் சிந்தனை சக்தியை ஆகாத வழிகளில்தான் விரயம் செய்கிறார்களா? அறிவுலகத்தை இகழ்ந்துரைக்கும் 'மேன்மை'க்குரியவர்கள் ஆய்ந்து பார்க்கவேண்டும். கூர்மையான ரசாயணக் கத்தியை கற்றுத் தேர்ந்த மருத்துவர் அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தி மயானத்துக்குப் போய்க்கொண்டிருக்கும் நோயாளியை இல்லத்திற்குத் திரும்ப அழைத்து வந்து விடுகிறார். ஆனால் அதே கத்தி கல்லாத மூடன் கையில் சிக்கும்போது அவன் அதை வழிப்பறிக்கொள்ளைக்குப் பயன்படுத்துகிறான். இங்கே, ஆயுதத்தால் ஆபத்து இல்லை; ஆயுதத்தைக் கண்டுபிடித்தவன்பால் குற்றமில்லை. ஆயுதத்தை ஏந்தி நிற்பவனின் மனோநிலையை ஒட்டி ஆயுதம் சக்தி பெறுகிறது.

மது-சில இடங்களில் மருந்து! பல இடங்களில் 'மாமருந்து'!

— 6-ம் பக்கம் —

வெந்து சாவதா? விழுந்து சாவதா?

— க. நாராயணன் —

அந்த எழிலோவியம் அவனைக் கவிஞனுக்கியது. அதை வர்ணித்தபடியே பாடிக்கொண்டிருந்தான் மூர்த்தி. கடிகாரம் ஒன்பது அடித்ததும் அந்தப் படத்திற்கு ஒரு முத்தம் கொடுத்து, மேசைமீது வைத்து விட்டு அலுவலகத்திற்குச் செல்ல உடைகளை அணிந்து கொண்டான்.

மீண்டும் மேசையருகே வந்து, "சுந்தரி, நான் போய்வருகிறேன், இனி மாலையில் சந்திப்போம்" என்று அந்தப் படத்திடம் சொல்லிவிட்டு, அறையைவிட்டு வெளியில் வந்தான் மூர்த்தி. மீண்டும் மேஜையில் உள்ள படத்தைப் பார்த்து, "டாடா" என்று சொல்லிவிட்டு, கதவை இழுத்துப் பூட்டினான். அவன் வாய்பாரதிதாசனின் கவிதையை முணுமுணுக்க ஆரம்பித்தது. "பூவாத புதுக்காதல் பூக்க நோக்கி ஆணினத்தைக் கவர்கின்றாள்! நிலா முகத்தாள்!" என்று பாடிக்கொண்டே அலுவலகம் சென்றான் மூர்த்தி.

மூர்த்திக்கு வயது முப்பது இருக்கும். இன்னும் திருமணமாகவில்லை. அவன் திருமணம் செய்துகொள்ள நினைத்தது 22-வது வயதில். அப்போதிருந்தே அவன் பெண்தேட ஆரம்பித்தான். தன்னுடைய நண்பர்களிடத்திலும் சொல்லி வைத்தான். தான் விரும்பும் பெண்ணின் அழகையும், குணத்தையும் எல்லோரிடத்திலும் விவரிப்பான். தன் மனதிற்சேற்ற அழகி கிடைக்காத வரையில், தான் திருமணமே செய்துகொள்ளப்போவதில்லை என்றும் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் மூர்த்தியைத் தேடிக்கொண்டு, அவனுடைய நண்பன் பாலு வந்து சேர்ந்தான். பாலு ஒரு ஓவியன். "மூர்த்தி! உனக்கேற்ற ஒரு அழகியை நான் கண்டுபிடித்து விட்டேன்" என்றான் பாலு! "எங்கே? எப்போது? அவள் எப்படியிருக்கிறாள்?" என்றெல்லாம் கேள்விபோட ஆரம்பித்துவிட்டான் மூர்த்தி.

"மயில் போலும் சாயல்
கொண்டாள்
நிறைமதி முகத்தாள்"

என்றான் பாலு. "ஆஹா! கவிதையாக வர்ணித்துவிட்டாயே அவளை! அவளைத் தானடா பாலு நானும் தேடிக்கொண்டிருக்கிறேன்!" என்றான் மூர்த்தி. நான் வர்ணிக்கவில்லையடா, கவிஞர் பாரதிதாசன் எழுதிய அக்கவிதைக்கு ஒரு படம் வரையும்படி "தமிழ்த்தேன்" ஆசிரியர் என்னைக்கேட்டுக்கொண்டார். அதன்படி நானும் படம் வரைந்திருக்கிறேன். அதை உன்னிடம் காட்டிச் செல்வதற்குத்தான் வந்தேன். இதோ பார் அவளை:" என்று ஒரு உறைக்குள் இருந்த ஓவியத்தை எடுத்துக் காட்டினான் பாலு.

அந்தப் படத்தைப் பார்த்ததும் "இவளேதான் என் காதலி!" என்று கத்திவிட்டான் மூர்த்தி. "பாலு! நீ வேறொரு படம் வரைந்து, அந்த ஆசிரியரிடம் கொடு. இதை எனக்குக் கொடுத்துவிடு. நான் பணம் தருகிறேன்" என்று, அதை பாலுவிடமிருந்து பிடுங்கிக் கொண்டான் மூர்த்தி.

இது நடந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று முதல் மூர்த்தி ஒரே பிடிவாதமாக அந்தப் படத்திலுள்ள ஒரு பெண்ணைப் போலவே தனக்கும் மனைவி வந்து வாய்க்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டான். அவன் எண்ணம் போல, இன்று வரை எந்தப் பெண்ணும் அந்த ஓவியம்போல் அமையவில்லை. மூர்த்தி அந்தப் படத்திலுள்ள பெண்ணையே மானசீகமாகக் காதலித்தான். இந்த ஒருதலைக் காதல் நாளடைவில் முற்றியது. ஓய்வு நேரங்களில் அந்த ஓவியத்தைப் பார்ப்பான். மேலே சொன்ன கவிதையைப் பாடுவான். அந்த ஓவியத்திற்கு முத்தமிடுவான். காதல் வசனங்களை அதனிடம் பேசுவான். இப்படியே எட்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் அவனுடைய லட்சியக் காதலி அவனுக்குக் கிடைக்கவில்லை.

அன்று மாலை வீடு திரும்பும் சமயம்; பஸ் நிற்குமிடத்தில் காத்து நின்றான் மூர்த்தி. திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது. அங்கு நின்றவர்கள் மழைக்கு ஒதுங்க ஆளுக்கொரு இடமாக ஓடினார்கள். மூர்த்தி பக்கத்திலிருந்த தபால் நிலையத்திற்குள் ஓடினான். அதற்குள் அவன் உடைமுழுவதும் நனைந்து விட்டது.

அங்கே 'கவுண்டருக்கு' அருகில் அமர்ந்திருந்தாள் ஒருபெண். நனைந்து கொண்டே அங்குவந்து ஒதுங்கிய மூர்த்தியை பரிதாபத்துடன் அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது அங்கே கூட்டமில்லை. மூர்த்தி சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தான். அவன் கண்கள் அந்தப் பெண்ணின் கண்களைச் சந்தித்தன. ஓவியத்தில் பார்த்த அதே கண்கள் தான் அவளுக்கும். ஆனால் உடலமைப்பும், முகமும் மாற்றமடைந்திருந்தன. ஏமாற்றத்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டான் மூர்த்தி.

ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. மீண்டும் அவளுடைய கண்களை மட்டும் சந்திக்க அவனுடைய உள்ளத்தில் தணியாத ஆசை பிறந்தது. திரும்பினான்; அவளைப் பார்த்தான். அவளும் பார்த்தாள். அவளுடைய உதட்டிலே ஒரு புன்னகை நெளிந்தோடியது. ஆனால் அது மின்சாரம்போல் அவன் உள்ளத்தைத் தாக்குமென்று அவன் முதலில் நினைக்கவில்லை. அவன் வாய் முணுமுணுத்தது அந்த அடிகளை :-

"............விழ்ந்தார் வாழ்வைப்
பூணுதற்கே இதழோரப்
புன்னகைதான்
பூவாத புதுக் காதல் பூக்க
நோக்கி
ஆணினத்தைக் கவர்கின்றாள்!
நிலா முகத்தாள்"

ஆனால் "நிலாமுகம்" என்று அந்தப் பெண்ணைக் குறிப்பிட அவன் நாக்கு விரும்பவில்லை. குமாஸ்தா வேலைசெய்யும் அந்தப் பெண்ணின் முகம், காய்ந்து சருகான இலையைப்போல் பளபளப்பின்றி இருந்தது; பசுமையில்லை. ஆனால் கண்கள்? மீண்டும் திரும்பி அந்தக் கண்களைப் பார்த்தான்.

"காணுதற்குக் கருவியோ
கயற்கண் இன்பக்
காட்சிதரும் பொருளன்றோ!"

என்று, அவன் வாய் அந்தக் கண்களைப் பார்த்துப் புலம்பியது. மழையும் நின்றது. வீட்டிற்கு வந்தான் மூர்த்தி. ஓவியத்தைக் கையில் எடுத்தான். "அழியாத அமரத்துவம் பெற்ற அழகி நீ! அவளுடைய கண்கள் மட்டுமே உன்னைப் போன்றது. ஆனால் அவள் உனக்கு ஈடாகமாட்டாள்" என்று அந்த ஓவியத்திடம் பேசினான். அன்று இரவு அவனுடைய கனவில் ஓவியப் பெண்ணும், தபால் நிலையக் குமாஸ்தாப் பெண்ணும் வந்து வந்து போனார்கள்.

மறுநாள் மாலை பஸ்ஸுக்காக வந்த மூர்த்தி, தபால்நிலையத்தை நோக்கிச் சென்றான். அந்தப் பெண்ணைச் சந்தித்தான். கார்டு கவர் வாங்கினான் அவளிடம். பிறகு மெதுவாக அவளிடம் பேச்சுக்கொடுத்தான். "உங்களை எங்கேயோ சந்தித்திருக்கிறேன்; ஆனால் எங்கே என்றுதான் நினைவு வரவில்லை" என்றான் மூர்த்தி தலையைச் சொறிந்தபடி. "எங்கே?" நிமிர்ந்து அவனைப்பார்த்துக் கேட்டாள் அந்தப் பெண். அடேயப்பா அந்தப் பார்வையில்தான் என்ன சக்தி! அவன் கவர்ச்சியடைந்தவனாய் அசைவற்று நின்றான் சிறிது நேரம்!

"நினைவில்லையோ?" புன்னகையை அள்ளி வீசினாள் அவள்.

"ஆமாம்! உங்கள் பெயர்?

"சுந்தரி!"

"சுந்தரி?"

'ஏன்? அந்தப் பெயரும் கேள்விப்பட்டதில்லையா?"

"நினைவுக்கு வரவில்லை"

அத்துடன் பேச்சு முடிய வேண்டிய நிலை ஏற்பட்டது, மூன்றாவது ஆள் அந்த இடத்திற்கு வந்ததால்!

அதன் பிறகு நாளடைவில் மூர்த்தியும், சுந்தரியும் காதலிக்க ஆரம்பித்தார்கள். காதல் வளர்ந்து, தழைத்து, பூத்து

— 7-ம் பக்கம் —

★ கவிஞனும் காதலும் ★

கண்ணதாசன்

௨

கவிஞனது நாடி நரம்புகள் சோதிக்கப்பட்டால், மற்றைய மனிதர்களுக்கில்லாத தனிச் சக்தியை அவை உள்ளடக்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். மான உணர்ச்சியால் துடித்தெழும்போது தவிர, மற்றைய நேரங்களில் சாதாரண மனிதனுக்கும் கவிஞனுக்கும் ஒற்றுமை இல்லை.

கவிஞன் தன் மனைவிக்குக் கணவன் என்பதோடு, குழந்தையாகவும் இருக்க ஆசைப்படுகிறான். ஆடை அணிவித்து அலங்காரம் செய்துவிடுவது வரை, தன்னைப் பற்றிய எல்லாப் பொறுப்புகளையும் தன் மனைவியே ஏற்றுக்கொள்வதை விரும்புகிறான். குழந்தையைக் கொஞ்சுவதுபோல் தன்னை, தன் காதலியோ, மனைவியோ கொஞ்சுவதில் அவனுக்கு மகிழ்ச்சி அதிகம். 'என் கண்ணல்ல'', ''ராஜா'' இப்படியெல்லாம் அவள் பேசி முடிந்த பிறகுதான் சிறிதுநேரம் தாயாகி, அவளைக் குழந்தையாக்குகிறான். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இதை அவன் எதிர்பார்க்கிறான். தான் இறந்தால் அவள் உணர்ச்சி எவ்வகையில் இருக்குமென்பதைக்கூட, சாவதற்கு முன்னாலேயே தெரிந்துகொள்ள அவன் ஆசைப்படுகிறான். தெரிந்துகொண்டு, அவள் பேசிய பேச்சோடு பேசாததையும் கலந்து காவியமாக்குகிறான்.

கவிதை எழுதுகிற எல்லோருமே, இப்படித்தான் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. கவிதை எழுதுவோர் வேறு; கவி இதயம் படைத்தோர் வேறு. தமிழாசிரியர்கள் வழுவற இலக்கணம் கற்றவர்கள். அவர்கள் எல்லோருமே கவிதை எழுதுகிறார்கள். ஆனால் அந்த அனைவருமே கவி இதயம் படைத்தவர்கள் அல்ல. சிலர் இருக்கலாம்; அவ்வளவுதான். பேனாப் பிடித்தவர்கள் எல்லோருமே எழுத்தாளராகி விடுவதில்லை. அதுபோலவேதான், கவிதை எழுதுகிற எல்லோருமே கவி இதயம் கொண்டவர்களாக இருப்பதில்லை. இயந்திரக் கவிஞர்கள் அதிகம். சற்பனை வளம் அவர்கள்பால் குறைவு.

நல்ல கவி இதயத்துக்குச் சான்று தேடினால், அப்போதும் முதலிடத்தில் பாரதிதான் வந்து நிற்கிறான். சாதாரண சராசரி மனிதர்களின் ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புகளின்மீது புதிய தத்துவத்தைப் போதிக்கும் சிறந்த இதயம் பாரதியின் இதயம். சாவைக் காலால் மிதிக்கத் தாவுகிற அளவுக்கு அவன் பயமற்றவன். ''சென்றது மீளாது. சென்றதைச் சிந்தித்து உழலாதே! இன்று புதிதாய்ப் பிறந்ததாக எண்ணிக்கொள்.'' ''மனமே! ஒன்றையே பற்றி ஏன் ஊசலாடுகிறாய்? பேயாக ஏன் உழலுகிறாய்?'' - இப்படியெல்லாம் அவன் கேட்கும்போது, பொறியும் புலனும் தனக்கு அடங்க வேண்டியவையே என்று உறுதியாக நம்பி; அந்த உச்ச இடத்தில் இருந்துகொண்டுதான் கேட்கிறான். வாத்தியார் மாதிரி கண்டிக்கிறான். மீறிப்போனால் பிரம்பால் அடிக்கிறான். பரந்த உலகத்தைச் சாதாரணமாக மதிக்கும் மனப்பண்புக்கு, துளிக்கூடச் சலனமில்லாமல் வந்துவிடுகிறான். ஆயிரம் பதினாயிரம் குழப்பங்களாலே பின்னப்பட்டிருக்கும் உலகச் சிக்கலில் அகப்பட்டுக்கொள்ளாமல், மேட்டில் ஏறி நின்றுகொள்வது சுலபமல்ல. ஒரு நேரத்துணிச்சல் மறுநேரம் இல்லாத அளவுக்குப் பலங்கெட்ட மனதை முழுக்க அடக்கி ஒரே நிலையில் வைத்திருப்பதும் எளிதல்ல. பாரதி அதைச் செய்துகாட்டினான். இயற்கைச் சுழலில் கவலை வந்தாலும், அது கணநேரத்தில் மாறிவிடுகிறது. ஒரு அலட்சியமான விரச்தி கலந்த சிரிப்பு வருகிறது. மறுகணம் இதயம் துள்ளிக் குதிக்கிறது. கவிஞன் காளையாகிறான். ''உலகத்தில் என்ன இருக்கிறது ஐயா! என்றைக்கோ ஒருநாள் சாகத்தான் போகிறோம். இடைப்பட்ட நாளை ஏன் வீணாக்கவேண்டும்'' - இப்படி ஒரு முடிவுக்கு வந்து, அந்த எல்லையிலேயே காவிய உலகம் படைக்கிறான் பாரதி. அதனால்தான் அவன் சொல்வதெல்லாம், தெளிவாக அமைகிறது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு கருத்துக்களைச் சொன்னாலும், இரண்டுக்கும் முழுமை இருக்கிறது. அரைகுறைச் சிந்தனை அவசரப் பிறப்பு எதையும் அவன் கவிதைகளில் காணமுடிவதில்லை.

''வயது ஏறிக்கொண்டே இருக்கிறது. பருவம் மாறிக்கொண்டே இருக்கிறது. அனுபவி! அனுபவி! காலத்தைப் பிடித்துக்கொள்!'' என்கிறானே, இந்த முடிவு அவன் முதற் கவிதை எழுதும்போதே வந்துவிட்டது. 'காதல் போயிற் சாதல்'' என அவன் சொன்னது, ஓசை நயத்துக்காக அல்ல. ''அதற்குப் பிறகு என்ன இருக்கிறது!'' என்ற கேள்விக்கு முடிவான விடையாகும். காதல் கசப்பாகி, கசப்பு முதுமையைத் தந்து, முதுமை சாவை இழுத்து வருவதில் அவனுக்கு விருப்பமில்லை. காதல் போயிற் சாதல்- அவ்வளவுதான்; துறவுகூட அல்ல!

★

பெண்மை நளினமானது; இளகியது; எழிலானது. அதனால் தான் காதல் நுழைகிறது. ஆண் மாதிரி பெண்ணும் இருந்தால், காதல் கோரமாக இருக்கும். அதனால்தான் பெண்மையின் குணங்களை கலை உணர்வோடு படைத்தார்கள். மண்ணை, விண்ணை, நதியை, நிலவைப் பெண்ணாக்கிக் காட்டினார்கள். பெண்ணுக்கு வீரம் வேண்டும்; கல்வி வேண்டும். ஆனால் நாணம் முதலில் வேண்டும். குழைவை இழந்த பெண், கோரமானவள்; மரக்கட்டை. ஆங்கிலக் குடும்ப நாகரீகம் பாழ்பட்டுப் போனதற்கு மூலகாரணம், பெண்மை நளினமிழந்ததுதான்.

''நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும்'' எனக் கனலக்கிய பாரதியும், தன் கதாநாயகியைக் குழைய வைத்துப் பார்க்கிறான். காதலில் அவள் முகத்தைத் தூக்கிக்கொண்டு சாடுவதில்லை; புலியைக் கண்டால் சுடவேண்டும்; அப்போது நாணம் வேண்டாம்- அவ்வளவுதான்.

(வரும்)

நயா பைசா-குழப்பம்! குழப்பம்!!

''இந்தியப் பேரரசு 'நயா பைசா' என்ற புதிய காசுகளைப் புகுத்தியிருக்கிறது; கிராம மக்கள் இதைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல; ஒரு நாணயத்தில் 10 என்று போட்டிருக்கிறது. அதை கிராம மக்களிடம் சென்று 'இது 10 அணா நாணயம்' என்றாலும் அதை அந்த கிராம மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். '10 காசு நாணயம்' என்றாலும் அதை ஏற்றுக் கொள்வார்கள். அவர்களுக்கு அதில் தெரியக்கூடியது '10' என்ற எண் மட்டும்தான்; மற்றதெல்லாம் இந்தியிலிருக்கிறது!

''இந்தக் காசு வந்ததில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ஒரு புதிய காசை 'நயா பைசா' என்று அழைக்கவேண்டுமாம்; ஒன்றுக்கு மேற்பட்டதை 'நயே பைசே' என்று அழைக்க வேண்டுமாம்! 'நயா' என்றால் புதிய அல்லது புது என்னும் பொருள் படுகிறது. இது ஒருமைச் சொல்! 'பைசா' என்றால் 'காசு' என்று பொருள்; இது பன்மையாக மாறும்போது 'நயே பைசே' என்று அழைக்கச் சொல்லுகிறார்கள். 'பைசா' என்பதை 'பைசே' என்றழைப்பதில் ஒருமை-பன்மை வித்தியாசத்தைக் காட்ட முடியும்; 'நயா' என்பதை 'நயே' என்றால், 'புதிய அல்லது 'புது' வார்த்தை பன்மையாகி 'புதுக்கள்' என்றா அழைக்கமுடியும்? 'புதுக்கள் காசுகள்' என்றா பொருள் கொள்வது? நாம் புதுக் காசுகள் என்று பன்மையை (ஒன்றுக்கு மேற்பட்டதைக்) காட்டுகிறோம். ஒருமைக்கு 'புதுக்காசு' என்று சொல்லுகிறோம். காசு - காசுகள் என்றுதான் தமிழில் மாறுகிறதே தவிர 'புதுக்கள் காசுகள்' என்று மாறுவதைக் காணமுடியுமா? உலகத்தில் இதைவிட ஒரு மோசமான இலக்கணம் கொண்ட லம்பாடி மொழியைக் காணமுடியாது. இந்த மொழியை அரியாசனம் ஏற்றிக்கொண்டு அதை எல்லாத் துறைகளிலும் புகுத்திக்கொண்டு, அவர்கள் முகத்தைக் காட்டுவதுபோல் காட்டுகிறார்கள்.

''இக்காசு வந்ததிலிருந்து கணக்கு ஒரே குழப்பம்; பொருள்கள் விலையை உயர்த்திக்கொண்டார்கள். கணக்குக்கே வராத காசாக இருக்கிறது; எங்கேயும் ஒரே குழப்பம் நிலவுகிறது.'

திடீரென்று இப்போது ஒரு ஒரு புதிய குழப்பம் நடந்தது. புதுக்காசில் புள்ளி வைத்திருந்தால் செல்லும் என்றும் புள்ளி வைக்காவிட்டால் செல்லாது என்றும் புதுப்புரளி கிளம்பியது. பலர் அவதிப்பட்டார்கள். செல்லாது என்று 'மக்கள் முற்போக்குப் பத்திரிகை'யும் செய்தி வெளியிட்டது. பிறகு 'நம்முடைய' சர்க்கார் அறிக்கையும் வந்தது. புள்ளி வைத்த காசுகள் ஒரு தொழிற்சாலையிலும், வைக்காத காசுகள் வேறொரு தொழிற்சாலையிலும் செய்யப்பட்டதாக அது சொல்லிற்று. இதற்குள்ளாகப் புள்ளிக்காசுகள் விளைவித்த சண்டைகள் ஏராளம்! ஏராளம்!!

-கண்ணதாசன்.

" போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 | 27-4-57 | இதழ் 32

பன்மொழிப் புலவர்

தமிழில் முறையாகக் கற்றுத் தேர்ந்த புலவர்கள் பலர் தமிழகத்தில் இருக்கிறார்கள். அறிவும் ஆராய்ச்சித்திறனும் மிக்க பேரறிஞர்களாகவும் அவர்கள் விளங்குகிறார்கள் – என்றாலும், நினைக்கின்ற அனைத்தையும் உறுதியாகத் தெரிவிக்கும் பண்பு பெற்றோர் அவர்களில் எவருமில்லை.

அத்தகு பண்பின் மொத்த வடிவமானவர் ஒருவர் உண்டென்றால், அவர்தான் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள். மனதில் பட்டதைப் 'பளிச்'சென்று எடுத்து வீசும் திராணி அவரது தனிச் சொத்து. சொந்த வாழ்வில் அவர் சுகமிழந்து போனதற்கு மூலகாரணமே இதுதான். அரசாங்கவிருது, அடுத்தடுத்துப் பதவி உயர்வு, இவற்றை எண்ணிக் கருத்துக்களை மறைத்து வைத்துக்கொண்டு வாழவேண்டிய சூழ்நிலை உள்ள நாட்டில், அவற்றைத் துச்சமெனத் துறந்து, வேறெந்தப் புலவரும் சிந்தித்தும் பார்க்காத அளவில் அரசியலில் ஈடுபட்டவர் பன்மொழிப்புலவர். ஒப்பியல் நூலும், உயர்தமிழ் ஆராய்ச்சி நூலும், கற்பனைக்கதையும், காலம்கடந்த வரலாறும், பண்டை வாணிபம் பற்றிய நூலும், பிறமொழியாளரின் கலைச்செல்வமும் - ஆம்; அவர் தமிழுக்கு அளித்து அணிந்துள்ள கலன்கள் ஏராளம்! ஏராளம்! ஆனால், இவற்றிற்காக அவர் பெற்ற கைம்மாறு மிகவும் சாதாரணம்!

எத்தனை எழுதினாலும் வாழ்விலே வறுமை; "இல்லையே" எனும் கொடுமை; இதுவரை அவர் வாழ்வு இப்படித்தான் நடந்துவந்துள்ளது. இதனை எண்ணிப் பார்த்தாவது அரசியலைவிட்டு, தொழிலை மட்டும் கவனிக்க அவர் எண்ணியதுண்டா என்றால் இல்லை. அவரது கருத்தே அரசியலோடு பிணைந்துவிட்டது.

பாலோடு வீரத்தை ஊட்டும் பழந்தமிழர் பண்பினைப்போல, மாணவர்களுக்குப் படிப்போடு பகுத்தறிவை ஊட்டியவர் பன்மொழிப்புலவர். அரசியலிலும் சரி, புலவருலகிலும் சரி, இடம் பிடித்து உயரக்கூட அவர் முயன்றதில்லை. 'இருக்குமிடம் தெரியாமல்' இருந்து சேவை செய்பவர் அவர். "இவர் இவ்வளவு படித்திருக்கிறார்" என்றால் யாரும் நம்பமாட்டார்கள்; அவ்வளவு அடக்கம். படாடோபமும், பகட்டும், விளம்பரமும் தேவைப்படும் உலகில், அவர் குடத்து விளக்கு. பத்து மொழிகளுக்கு மேல் தேர்ச்சிபெற்ற சிறந்த அறிவு அந்த உருவத்தில் தேங்கிக்கிடந்தும் அதைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பைத் தமிழகம் இன்னும் சரிவரப் பெறவில்லை.

செட்டிமார் நாட்டில் சீர்திருத்தம் பரவியதற்கு முழுக்காரணம் பன்மொழிப்புலவரே! திருப்பவே முடியாத செட்டிநாட்டு இளைஞர்களின் இதயத்தை சுலபத்தில் திருப்பியவர் அவர்தான். பிரமாத சீர்திருத்தம் பேசிய சில புலவர்கள், பிற்றை நாளில் தி. மு கழகத்தையே கேலி பேச ஆரம்பித்தார்கள். தங்கள் பதவிகளைக் காத்துக்கொள்ள. ஆனால், அந்தச் சாடை தெரிந்தாலே பதவி போகும் என்றிருந்த இடங்களில், நேரடியாகவே அரசியல் முழக்கி, பதவியைத் துறந்து வெளியேறியவர் பன்மொழிப் புலவர்.

அவரது மணிவிழா, அறிவுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

அதன்றியும் நிதியளிப்பது எனப் பழைய மாணவர்கள் பன்னிருவரைக் கொண்ட கழகம் முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். தரப்படவேண்டியவர்-தகுதி உள்ளவர் - தன் எதிர்கால வாழ்வில் தமிழுக்கு இன்னும் அதிகமாக உழைக்க ஆர்வம் உள்ளவர் – உழைக்கக் கூடியவர். அவரது நிதிக்கு அள்ளி வழங்குவது ஒவ்வொரு தமிழனுக்கும் நீங்காக் கடமையாகும் என்பதை, பழைய மாணவன் என்ற முறையில் வலியுறுத்த விரும்புகிறேன்.

வள்ளல்கள் மறைந்துவிட்ட காலத்தில் அப்பாத்துரையார் மணிவிழா வருகிறது. என்றாலும் மக்களே வள்ளல்களாக மாற முடியும்! அந்நாளில் வாழ்ந்திருந்தால், 'அட்சரத்துக்கு லட்சம்' பெறுவார். இந்நாளில் வாழ்கிறார்; இரண்டணா நான்கணாவாகவாவது சேர்த்துத் தருவோம்.

அவரது குடும்ப வாழ்வுக்குப் பெருத்த ஆதாரமாயிருந்து, அவரைக் காத்துவரும் அலமேலு அம்மையார் சில நாட்களாக எழுந்து நடமாடக்கூடச் சக்தியில்லாமல் கிடக்கிறார்கள். இந்த நேரத்தில், தமிழ்மக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! உங்கள் உதவி இன்றியமையாதது! அனுப்புங்கள்! அனுப்புங்கள்! (பொருளாளர் முகவரி பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது!)

குறைந்தது பதினையாயிரம் ரூபாய்களாவது சேர்ந்தால் அவரது எதிர்காலம் ஒளிபடத் திகழும்! தமிழர்களுக்கு அந்த நன்றி உணர்ச்சி இருக்குமா?

—கண்ணதாசன்

பன்மொழிப் புலவர் மணிவிழா

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ரூ. 501 அளித்தார்

பழைய மாணவர் கழகம் வேண்டுகோள்

வரும் ஜூன் மாதம் 21ந் தேதியன்று சென்னையில் நடைபெற இருக்கும் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் மணிவிழா பற்றி பன்மொழிப் புலவரிடம் பயின்ற பழைய மாணவர்களின் கழகம் கீழ்க்காணும் அறிக்கையை விடுத்திருக்கிறது:—

'பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்களுக்கு வரும் ஜூன் மாதம் 21ந் தேதியன்று 50 ஆண்டுகள் நிறைகின்றன. தமிழில் வித்வானாகவும், ஆங்கிலத்தில் எம். ஏ., எல். டி. யாகவும், இந்தியில் விசாரத் (வித்வான்) ஆகவும், தேர்ச்சி பெற்று, மற்றும் எட்டு மொழிகளில் எழுத, பேச, மொழிபெயர்க்க வல்லவராக விளங்கும் அவருக்கு தன் கடமையைச் சிறந்த அளவில் செய்ய பழைய மாணவர் கழகம் முயற்சிக்கிறது. இதுவரை அவர் நூற்றைம்பது புத்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். பல பதிப்பகங்களும் அவரது நூல்களை வெளியிட்டுள்ளன. என்றாலும், வாழ்க்கைக்கு எந்தவித நிலையான வருமானமும் இல்லாத வறுமை நிலையில் அவர் வாழ்கிறார். இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் அவர் பட்ட தொல்லைகள் அதிகம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபட்டதால் ஆட்சியாளரின் மிருகத்தனமான சித்திரவதைக்கு அவர் இலக்காகியிருக்கிறார். அவரது துணைவியார் அலமேலு அப்பாதுரை அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடு இணையற்ற சேவை செய்து வருவதை நாடு அறியும். அறிவும் சேவையும் நல்லெண்ணமும் கொண்டு வாழ்ந்து வரும் அவர்களுக்கு தன்னால் இயன்ற நிதியை அளிக்க பழைய மாணவர் கழகம் விரும்புகிறது. இதற்கென முதன் முதலாக புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ரூ. 501 அளித்திருக்கிறார்கள். இதைக் கண்ணுறும் மற்றைய பெருமக்களும் தங்களால் இயன்ற நிதி உதவியைக் கீழ்க்காணும் பொருளாளர் முகவரிக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

இங்ஙனம்,
செயலாளர்,
பழைய மாணவர் கழகம்.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

எம். குமாரசாமி,
பொருளாளர்,
பன்மொழிப் புலவர் மணிவிழா,
7, அருணசல ஆசாரி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை-5.

[குறிப்பு: நிதி வரவுக் கணக்கு 'தென்றலி'ல் வெளியிடப் படும். **ஆசிரியர்.**]

புதுக்குரல்

அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களிடையே ஒருசிலர் தலையெடுத்து, அமைப்பு முறை ஏற்படுத்துச் செயல்படுவதுதான் எதிர்க்கட்சி என்பது. ஆளும் கட்சியினைக் காட்டிலும் தூய்மையான கட்சி என்று பொதுமக்களால் மதிக்கப்படுவது அமைப்பு முறை - சட்டதிட்டம் இவைகளோடு கூடிய எதிர்க்கட்சிதான். ஆனால் இந்தியத் துணைக்கண்டத்தில், 'எதிர்கட்சி'யின் குரலைக் கேட்பதே 'அநாகரீக'மென காங்கிரஸ் ஆட்சியினர் கருதுகின்றனர். மருத்துவரைப்போல நடத்தப்பட வேண்டியவர்கள் இங்கே எதிரிகளாக - குடும்பப் பகைவர்களாகக் கருதப்படுகிறார்கள். 'எதிர்க் கட்சிக்காரர்கள் தானே! அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள்' என்று சொல்லிவிடுகிறார்கள். தி. மு. கழகம் எடுத்துச் சொன்ன குறைகளையெல்லாம் அவ்வாறு தான் கருதினார்கள் காங்கிரஸ் பிரமுகர்கள்.

'வடநாடு வாழ்கிறது! தென்னாடு தேய்கிறது'-என்றால், அது எப்படி? என்று கேட்பதுமில்லை! நாம் எழுதியிருப்பதைப் படிப்பதுமில்லை. இதைப்போல பல குறைபாடுகளில், குடை தங்கள் வசமிருக்கிற தைரியத்தில் 'கும்பகர்ணர்'களாகவே அவர்கள் நடந்துகொண்டார்கள்.

"ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் தான் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பாரபட்சம் ஏதுமில்லை." - என்று தேர்தல் காலத்தில் சொன்னார்கள். யார்? காங்கிரசுக்கும் எங்களுக்கும் வித்தியாசமில்லை என்று காட்டிக்கொள்வதற்குக் **'கம்யூனிஸ்டு'கள்** சொன்னார்கள்.

திட்டம் நிறைவேற்றுவதற்கும் ஜனத்தொகைக்கும் என்ன தொடர்பு - என்றால், அதற்கான பதில் இல்லை. அதனால்தான் அவர்களுக்கு ஓட்டுப்போட ஆள் இல்லை போலும்! அந்தோ பரிதாபம்! அவர்களுக்கு நம் அனுதாபம்!

இப்போது ஒரு நண்பர் - கட்சி சார்பற்றவர் - வணிகத்துறையில் பெரும்பங்கு பெற்றுள்ளவர் மத்திய சர்க்கார்மீது பலமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

"தென் இந்தியாவில் இரும்புக் கனி ஏராளமாகக் கிடைக்கிறது. இங்கு அதிகப்படியாக ஒரு இரும்பாலையை ஏன் அமைக்கக்கூடாது என்பதற்குக் காரணமில்லை. இரும்பை வடஇந்தியாவிலிருந்து கொண்டுவருவதற்கே ரயிலுக்காகப் பெருந்தொகை செலவிட வேண்டியிருக்கிறது.

"இறக்குமதி செய்யப்படும் இரும்பிலும் உற்பத்தி செய்யப்படும் இரும்பிலும் பெரும் பகுதியைச் சர்க்காரே எடுத்துக்கொண்டு விடுகிறது. ஆகவே, பொதுமக்கள் விநியோகத்திற்குக் குறைவாகவே கிடைக்கிறது. அங்கீகாரம் பெற்ற சில வியாபாரிகள்மூலமே (டாடா) பெரும் அளவு இறக்குமதி செய்ய சர்க்கார் அனுமதிப்பது பாரபட்சம் காட்டுவதுபோலாகும்." என்று அவர் பேசியிருக்கிறார். பேசியவர் சாமான்யமானவர் அல்ல. தென் இந்திய இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர். ஏப்ரல் 24-ம் தேதி கத்தோலிக்கர் செண்டரில் நடைபெற்ற பதினான்காவது வருடாந்திரக் கூட்டத்தில் தலைவர் வி. எம். பி. முத்துச்சாமி செய்த முழக்கம் இது. சர்க்கார் இதற்கென்ன பதில் சொல்கிறது?

வளம் குன்றிக் கிடக்கும் நாட்டில் வளம் சேர்ப்பது அரசியலாரின் கடமையாக இருக்கும்போது, வளம் இருக்கும் நாட்டையே பாழ்படுத்துகிறார்களே என்று அவர் கண்ணீர் வடித்துச் சொல்லியிருக்கிறார். கழகம் சொன்னால் எதிர்ப்பார்கள், இவர்களுக்கென்ன வேலை என்பார்கள். அந்தத் துறையிலேயே ஊறிப்போன ஒருவர் சொல்கிறார். தென்னாட்டில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படாததால் ஏற்படும் தொல்லைகளை விளக்கியிருக்கிறார். அனுபவம் சார்ந்த இந்த உண்மையை உதாசீனப்படுத்தினால் விளைவின் சக்தி எந்த உருப்பெறும் என்று நம்மால் விளக்க முடியாது.

சர்க்காருக்கு மீண்டும் நினைவுப் படுத்துகிறோம். தோழர் முத்துச்சாமி எந்த அரசியல் கட்சியின் சார்பிலும் இவ்வாறு எடுத்துக் கூறவில்லை. இரும்பு வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் பேசிய பேச்சாகும். ஒரு பிரச்சினை, கட்சிப் பிரச்சினையிலிருந்து உயர்ந்து மக்கள் பிரச்சினையாகும்போதுதான் அந்தச் சிக்கல் நீதி பெறுகிறது. இப்போது அந்த நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. வடநாடு - தென்னாடு பிரச்சினை மக்கள் பிரச்சினையாக உருப்பெற்று வருகிறது என்பதற்கு தோழர் முத்துசாமியின் முழக்கம் ஒரு சான்றாகும்.

நன்றி

நடைபெற்ற தேர்தலில் சென்னை சட்டமன்றத்திற்கு சிவகங்கைத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும் பணியாற்றிய கழகத் தோழர்கள் - ஆதரவாளர்கள்-நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தோல்வியுற நேர்ந்தாலும் அதிர்ச்சியுறத் தேவையில்லை. பிற்போக்கு சக்திகளையும் அறியாமை நோயினையும் வீழ்த்திட என்றும்போல் போராடுவேன் - போராடுவோம்! துவளாமல் தூயருமல் தூயபணி ஆற்றுவோம்.

அன்பன்
வீ. வீரப்பன்



மகாகவி பாரதியார் கவிதைகள்-மலிவுப் பதிப்பு

தமிழ் இலக்கியப் பரப்பிலே கவிதைப் பகுதி தனி அங்கம் வகிக்கிறது. பொதுவாக, உலக இலக்கியங்கள் பல, செய்யுள்களாகவே அமைந்து வந்திருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் இலக்கண நூல்கள் கூட செய்யுளிலே அமைந்துள்ளன. தமிழகத்தின் கவிச்சிறப்பை இந்த இலக்கண நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. தவிரவும் தமிழ் இனம் கவிதையிலே நல்ல பயிற்சி பெற்று வந்துள்ளதை, பழந்தமிழ் இலக்கியங்களும் சரி, புத்திலக்கியங்களும் சரி நன்றாகவே நிரூபித்து வருகின்றன. குறிப்பாக இந்த நூற்றாண்டில் கவிதை வெள்ளம் நாட்டில் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த வெள்ளத்தை எல்லோரும் அடைந்து ஆனந்திக்கும் வண்ணம், எளிய முறையிலே மாற்றிய பெருமை **சுப்ரமணிய பாரதியாரைச்** சேரும்.

நாட்டு விடுதலைப் போரில் பாரதியார் பாடிய கவிதைகள் ஏராளம். அதன் பயனாய் சோர்விழந்த மக்கள் வீர உணர்வு பெற்றனர். தமிழகத்துக்கு அவர் தந்த கவிதைச் செல்வம் மிகச் சிறந்ததாகும். இந்தச் செல்வத்தை எல்லோரும் அடையமுடியாதபடி அவரது நூல்கள் அதிக விலையுள்ளனவாக இருந்து வந்தன. அரசினர் வெளியிட்ட பாரதி கவிதை நூலும் சரி, தனிப்பட்டோர் வெளியிட்ட நூலும் சரி அதிக விலையுள்ளனவாகவே இருந்தன. எல்லோரும் வாங்குகின்ற முறையிலே மலிவான விலையில் இருக்கவில்லை. இந்த நிலையைப் போக்கி, எல்லோரும் எளிதில் வாங்கும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார் **திரு. வை. கோவிந்தன்** அவர்கள். பாரதியார் கவிதையை குறைவான விலையில் உயர்ந்த காகிதத்தில் வெளியிட்டுள்ள திரு. கோவிந்தன் அவர்களைத் தமிழ் மக்கள் பாராட்டத்தான் வேண்டும்.

'தினமணிக்'காரர்கள் வெளியிட்ட 'வியாசர் விருந்து' மலிவுப் பதிப்பைவிட, சக்தி காரியாலத்தார் வெளியிட்டுள்ள 'பாரதியார் கவிதைகள்' பல மடங்கு சிறப்புடையது என்று சொல்லலாம். இந்த வெளியீட்டுக்கு இன்னொரு சிறப்பும் இருக்கிறது. அரசினரின் வெளியீட்டிலும் சரி, தனிப்பட்டோர் வெளியீட்டிலும் சரி, இதுவரை வெளியாகாத, பாரதி கவிதை ஒன்று இந்த வெளியீட்டில் இடம் பெற்றிருக்கிறது.

"இனி ஒரு தொல்லையும் இல்லை" என்று தொடங்கும் இந்தப் பாடலில் பாரதியார், ஜாதி, புராணங்கள், ஸ்மிருதிகள், மேற்குலம், தவமும் யோகமும், பரம்பொருள், முதலியவை பற்றிச் சொல்லியிருக்கிறார். புராணங்களைக் கற்பனை என்று குறிப்பிடுகிறார்.

சூத்திர னுக்கொரு நீதி-தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு
வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின்
-அது
சாத்திரம் அன்று
சதியென்று கண்டோம்

என்று 'சாத்திர விளக்கம்' கொடுக்கிறார். இந்த வரிகள் அரசினரைக் கூடப் பயப்படுத்திவிட்டன என்றுதான் கருதுகிறேன். அதனால்தான் அரசினர் தம் வெளியீட்டில் இந்தப் பாடலை சேர்க்கவில்லை போலும்!

மேலும், இந்த வரிகள் பாரதிதாசன் அவர்களின் கவிதையில் ஏற்கனவே எடுத்தாளப்பட்டிருக்கின்றன. "பாரதியார் உலககவியல்ல" என்று 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி முன்னாளில் எழுதியபோது, அதை மறுத்து, "பாரதி உலககவி" என்று பாரதிதாசன் பாடினார். அந்தக் கவிதையில், "சூத்திரனுக்கொரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி என்று சாத்திரம் சொல்வதை பாரதியார் கண்டித்தார்" என்று பாரதிதாசன் குறிப்பிட்டிருக்கிறார். பாரதியின் இந்தப் பாடல் பல ஆண்டுகளாக மறைத்துவைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்துப் புதையலை வெளியே எடுத்துக்கொணர்ந்து தமிழ்மக்கள் அனைவருக்கும் பயன் கிடைக்குமாறு செய்த சக்தி காரியாலத்தாரைப் பாராட்டுகிறோம். பாரதியாரின் கவிதைகள் இதுவரை பல ஆயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகியிருந்தும், துணிவோடு, அதிகமான பிரதிகளை மலிவுப் பதிப்பாக வெளியிட்ட திரு. வை. கோவிந்தன் அவர்களுக்கு நமது பாராட்டு.

விலை ரூ. 1-8-0

வெளியிட்டோர் :
சக்தி காரியாலயம்,
ஆயிரம்விளக்கு, சென்னை-6.

-தமிழ்ப்பித்தன்.

அறிவாலயத்திற்குப் பதில் அரிகரதாஸ் கூடாரமா?

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

குடும்ப விளக்கின் குமிழ் சிரிப்பு இல்லறத்தின் ஜீவநாடி! கோடி வீட்டாளின் கடமைச் சிரிப்பு தொழிலுக்கான அறை கூவல்!

இந்தக் குறைகளெல்லாம் நீங்க ஆத்மீகம் வளரவேண்டும் என்கிருர்கள். அந்த ஆத்மீகம்தான் 'அல்லன செய்யாது' பாதுகாக்க வல்லது என்கிருர்கள். இந்தக் குறைகளெல்லாம் ஆத்மீகத்தால் அழிந்துபடக் கூடியவைகளா? அல்லவே! மாருக, பாவை மோகமும், பகற்கொள்ளையும் பானமும் ஆத்மிக உணர்ச்சியால் தானே வளர்ந்தன! அறிவின் உலைக்கூடத்தில் தயாரான சட்டங்களுக்குக்கூட இல்லாத, மன்னிக்கும் சக்தி ஆத்மீகத்திற்கு உண்டு என்று இத்தனை காலமும் பறைசாற்றி வந்ததால் வந்த வினைதான் மானிடரில் பெரும்பாலோர் எத்தகைய தீங்கினையும் செய்திடத் துணிவதாகும். காரணம், அறிவினிடம் உள்ள கண்டிப்பு, உறுதி ஆத்மீகத்தினிடம் அறவே இல்லை.

ஆத்மிகம் வளர்ந்தால் அறிவு வளர்ச்சியால் விளையும் ஆபத்துகளைத் தடுக்கலாமாம்! யார் அந்த உபதேசி? 'ஈரேழுபதினன்கு உலகங்'களையும் கண்டறிந்து வந்துள்ள ககனச்சித்தரா?

வாழ்வு மாயம் வையகம் அநித்யம்-என்று ஓதும் பண்டாரமா?

காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா - என்று 'கதை'க்கும் கபட யோகியா?

'எத்தனை தூரமோ பண்டரிபுரம்'-என்று 'பஜனை' நடத்தும் பக்தசிரோன்மணியா? அவர்களா இப்படிச் சொல்வார்கள்! அவர்களுக்குத்தான் ஆத்மிகத்தின் 'உண்மை வலிவு' தெரியுமே! மண்ணைத் தின்று உலகைக் காட்டியவனிடமும், கண்ணைப்பிடுங்கி கறிசமைக்கச் சொன்னவனிடமும், என்னைத்தான் இழுக்குதே எதிர்வீட்டு முல்லைப்பூ என்று புலம்பியமுதவனிடமும் ஆண்டாண்டுக் காலமாக ஆத்மிக உணர்ச்சியைக் காட்டிக் காட்டி ஒய்ந்துபோனவர்களாயிற்றே அவர்கள்? அவர்களா சொல்வார்கள் ஆத்மீகம் வளரவேண்டுமென்று?

நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் ஓர் அமைச்சர் சொல்கிருர் ஆத்மீகம் வளர வேண்டும், அறிவால் ஆகாதது ஆத்மீகத்தால் ஆகுமென்று!

''இருளை அகற்றுவேன்; ஒளியைப் பரப்புவேன். இன்னல்களை நீக்கிப் பொன்விளையச் செய்வேன். போக்குவரத்துகளை ஏற்படுத்துவேன், பொல்லாத அறியாமையை ஒழிக்க நாடெங்கும் கல்விச்சாலைகளைத் திறப்பேன்'' என்று கோயில்பாளையம் தொகுதியில் பொதுமக்களிடம் 'மகுடி' வாசித்து வாக்குகளைக் கேட்ட நிதிஅமைச்சர் சுப்ரமணியம்தான், திருக்கடவூர் சைவ சித்தாந்த மாநாட்டில் ஆத்மீகம் வளரவேண்டும் என்று பேசியிருக்கிருர். கூன், குருடு, குஷ்ட நோய்க்காரர்கள் ஆத்மீகத்தின் அவசியம் குறித்துப் பேசினால் அது தவறில்லை. அவர்களால் அதுதான் செய்ய முடியும். வேலையற்றவர்களும், வேலைக்கு வேலை உண்டு, கழித்து உறங்குவதைத் தவிர வேறு கதியற்றவர் தானே அபயக்குரல் எழுப்பிய வண்ணம் ஆத்மிக உணர்ச்சி பற்றி ஆராய முடியும்! மற்றவர்களுக்கு ஏது நேரம்! எல்லோரையுமே அவ்வாறு சோம்பலற்றவர்களாக மாற்றவேண்டும் என்ற நம்பிக்கையில தான் சுப்ரமணியத்திடம் பெட்டிச் சாவியைக் கொடுத்தார்கள். ஆனால் அவரோ, மந்திரிகளால் ஆகாதது மடாலயத்து 'திரு'நீற்றுப் பைகளால் ஆகுமென்கிருர். இதைச் சொல்லவா நமக்கோர் மந்திரி தேவை? இதற்குத்தானு இத்தனை பெரிய ஆடம்பரத்துடன் தேர்தல் நடைபெற்றது? வெட்கக்கேடு வெட்கக்கேடு!

ஆத்மிகம் வளர வேண்டுமாமே! முயற்சியுள்ள மனிதனின் முயல்வேகத் தினசரிப் பணியில் குறுக்கிடும் குறைகளுக்கும் அவசியமறியாமல் ஏற்படும் திங்குகளுக்கும் காரியத்தைச் செய்து கொண்டே தனக்குத் தானே பிராயச்சித்தம் தேடிக்கொள்ளும் முறைகளை சாதாரணப் பிரஜைகளாகக் கொண்டுள்ள நாடுகள் வாழும் காலத்தில், தன் அறிவிலும் முயற்சிகளிலும், நம்பிக்கை வைப்பதைக் காட்டிலும் ஆத்மிக உணர்ச்சி பெற்றிருந்தால் போதும் என்பவரை தமிழகம் 'வழிகாட்டி'யாகப் பெற்றிருக்கிறது! கேவலம்! **அமைச்சராக வைத்திருக்கிறது! 'சர்க்கார் நோட்டடித்தால் போதுமா'** என்று நாம் கேட்டபோது சிரித்தார்களே, இது வெறும் அலங்கார அடுக்குச் சொல்தானே என்று அங்கலாய்த்தார்களே, அவர்களது புதர் நெஞ்சில் பாயட்டும் இந்த 'ஆத்மிக உபதேசம்!'

அறிவு வளர்ச்சியால் ஏற்படும் தொல்லைகள் நீங்க ஆத்மிகம் வளரவேண்டுமா?

''கள்ள நாணயம் அடித்த கபட சந்நியாசி கைது!''

''பருவப் பெண்ணிடம் தகாத செயல் புரிந்த போலிச் சாமியாருக்குத் தண்டனை!''

''மூல விக்ரகத்தின் தங்கத் தகடுகளைப் பெயர்த்த அர்ச்சகர் கையுங் களவுமாகப் பிடிபட்டார்.''

''பக்திப் பதிகம் பாடிக் கொண்டே பக்கத்தில் நின்ற பெண்ணின் சங்கிலியை அறுக்க முனைந்த யாத்ரீகர்.''

''விபூதியில் விஷம் கலந்த பூசாரி வீட்டில் போலீசார் சோதனை.''

இவர்களெல்லாம் படித்துப் பட்டம் பெற்ற அறிவாளிகள் அல்ல! ஆத்மிக வளர்ச்சிக்கு அரும்பாடுபட அவதாரமெடுத்த 'பக்திப்பரவசங்கள்' அமைச்சர் விரும்பும் பின்னேடிகள்! இப்பேர்ப்பட்டவர்களின் தொண்டினால்தான் நாடு உருப்படமுடியும் என்கிருர். குடியைக் கெடுத்தவன், கலசத்தைத் திருடியவன், கோயிலைக் காட்டிக் கொலைபாதகம் புரிபவன் இவர்களைக் கொண்டு ஆத்மீகப் பிரச்சாரம் செய்தால் நாடு வாழுமா? அல்லது இவர்களுக்கெல்லாம் கல்வி தந்து, சிந்திக்கத் தூண்டும் அறிவு புகட்டினால் நாடு வாழுமா? எது வேண்டும்? அறிவா? ஆத்மிகமா? கோயில் பாளையம் வாக்காளர்மட்டுமல்ல; 'காளையிரண்டு பூட்டி வரும் சின்னம் எங்கள் சின்னம்' என்று 'ஓட்டுப்பண்' பாடிய அனைவருமே சிந்திக்கட்டும்! ★

ஆசிரியத் தோழருக்கு

-இராசன்-

வடநாட்டில் தமிழர்கள்!

அன்புடையீர் வணக்கம்.

'தமிழகம் உழைத்துவிட்டது! அது தவித்த நிலை மாறிவிட்டது ஐந்தாண்டுத் திட்டத்தால்!'' என்று தற்பெருமை பேசுகிருர்கள். உண்மையென்ன? தமிழர்கள் வடநாடு முழுதும் பிச்சைக்காரர்களாய்த் திரிகிருர்கள்.

சென்னையில் ஒரு வடநாட்டு அரசியல் தலைவர் மொழிந்தார் ''தில்லியில் தமிழன் பிச்சை எடுக்கிறன்!'' என்று. அது எவ்வளவு தூர உண்மை... உளம் கொதிக்கும்! குமுறும் நிலைமை என்ன என்பதை இங்கு வந்தபின் தான், என்னால் அறிய முடிந்தது.

ஒரு சிறு ஊரில் பத்துக்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பம் பிச்சை எடுக்க நேரிட்டால்...! வடநாட்டில் எத்தனை ஆயிரம் தமிழர் பிச்சைக்காரராகத் திரிதல் வேண்டும்! காரில் பவனி செய்யும் அந்தப் பெரிய அரசியல் தலைவரின் காதில் விழும்படி கூட தமிழ்ப் பிச்சைக்காரனின் குரல் ஒலி செய்தால்.. எந்த நிலையில் வடநாட்டில் தமிழ் அகதிகள் குவிந்திருப்பார்கள்!

சாலையில் நடந்துகொண்டிருந்தேன். பிச்சைக்காரர் கூட்டம் கண்டேன். தூரத்தே போலீஸ்காரர் வந்தார்! அவரைக் கண்டதும் கூட்டத்தில் ஒரு பெண் மற்றவரிடம் ''அதோ பார்! கரக்பூரில் பார்த்த கிழவன் மாதிரி இருக்கிறது!'' என்ருள் தமிழில். கிட்டத்தட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட மைல்கள் தங்கள் குடும்பத்துடன் கடந்து நடுத்தெருவில் இந்நாட்டின் மன்னர் குடும்பம் வாசம் செய்வது கண்டு, என் நெஞ்சம் இடியுண்டது!...சிந்தை இருண்டது. என் கையில் மட்டும் புகைப்படக் கருவி இருந்திருப்பின் படம் பிடித்து அனுப்பி இருப்பேன்.

மறுநாள்!

நண்பர்களை விசாரித்தேன். அவர்கள் கூறினர், ஒரு பகுதி, ''சேலத்துக் கைத்தறியாளர்'' என்று! நெஞ்சம் கலங்கினேன்! என்ன செய்ய, நாம் பிச்சைக்காரர்! நம் குடும்பம் வாழமுடியாதது! நம் நாடோ உலுத்தரும், சுயநலமிகளும் உடைய திருப்பூமி!

இன்று காலை...உணவருந்துசையில் ஒரு மகன் பிச்சை கேட்டான். உணவு விடுதிக்காரர் தமிழில் 'இல்லை போ!' என்ருர். மீண்டும் நின்ருர் சினத்தில். கெட்ட வார்த்தையில் மொழிந்தார்! என் நெஞ்சம் அடித்துக்கொண்டது, இவன் தமிழனாக இருந்துவிடப் போகிருனே என்று!

அதேபோல் நிகழ்ந்துவிட்டது.

''ஐயா! போடா கழுதை என்ருல் போகிறேன். இதற்காகக் கெட்ட வார்த்தையை ஏன் சொல்லுகிருய்! எங்கே போனாலும்...நம்ம தமிழர்கள்...தமிழனைக் கேவலப்படுத்துவதுதான் வழக்கம்'' என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதி என்ற பெயரில் ஒரு குடும்பம் கல்கத்தாவில் இருந்தது. அதில் ஒரு தாயின் குழந்தை இறந்து விட்டது. இதைப் படம் பிடித்து வங்காளப் பத்திரிகைகளில் பிரசுரித்திருக்கின்றனர். ஆசிய ஜோதியின் விழிகளில் தென்பட!... இதைப்பற்றிப் பிரமாதமாக வரைகின்றனர். நம் குடும்பம் எத்தனையோபேரை அநாதையாக ஆக்குகின்றதே எந்தப் பத்திரிகை முன் வருகிறது?

மனிதா தமிழனாக மண்மீதில் பிறவாதே!

மணியம்

வங்கம் வாழ் தமிழன்.

அழகி...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

காய்த்து, கனியாகிவிட்டது. இனி திருமணம்தான் பாக்கி.

சுந்தரியே அவனைத் தூண்ட ஆரம்பித்துவிட்டாள் திருமணத்திற்கு. ஆனால் மூர்த்தி முடிவு சொல்லாமல் நாட்களைக் கடத்தி வந்தான். சுந்தரிக்கு அவன் போக்குசந்தேகத்தை அளித்தது.

"நீங்கள் இதற்கு முன் யாரையாவது காதலித்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"உண்மையான பெண் ஒருத்தியைக்கூட நான் காதலிக்கவில்லை!"

"ஏன் எப்போதும் ஏக்கம் பிடித்தவர் போல் இருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, நாளை சந்திப்போம்; என் மனநிலை இன்று சரியில்லை. அதுதான் காரணம்" என்று சொல்லிவிட்டு, கடற்கரையிலிருந்து எழுந்து நடந்தான் மூர்த்தி.

அன்று விரைவில் அவன் எழுந்து செல்வது சுந்தரிக்கு அதிகச் சந்தேகத்தை அளித்தது. மூர்த்தி வேறு ஒரு பெண்ணை நினைத்து ஏங்குவதாக அவள் உறுதியாகநினைத்தாள். அவனைப் பின்பற்றிச் சென்றால் உண்மையைக் கண்டறியலாம் என்று தீர்மானித்தாள். அவனைப் பின் தொடர்ந்தாள் அவனுக்குத் தெரியாமல்.

மூர்த்தி அறைக் கதவைத் திறந்தான். நேராக மேஜையருகில் சென்றான். "கண்ணே உனக்குத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை. நீதான் என் எழிலரசி! மாசற்ற பொன்! வலம்புரி முத்து! மயில்! குயில்" என்று சொல்லிக் கொண்டிருந்தான் மூர்த்தி அந்த ஓவியத்திடம்.

"இப்போது புரிந்துவிட்டது!" என்ற சத்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினான் மூர்த்தி. பின்னால் சுந்தரி நிற்பதைக் கண்டு, படத்தை மேஜைமீது கவிழ்த்துவைத்தான்.

"பாவம்! மூர்த்தி! இதை என்னிடம் அப்போதே மறைக்காமல் சொல்லியிருக்கலாமே? சேவலம் இந்தப் பெண்ணையா நீங்கள் விரும்புகிறீர்கள்? இவள் உலகத்தையே நன்றாக அறியாதவள்! பிழைக்க வழி தெரியாதவள்! தரித்திரம் பிடித்தவள்! பசிக் கொடுமையால், மற்றவர்களின் தூண்டுதல் பேரில், நிறையப் பணம் கிடைப்பதாக எண்ணி, ஓவியம் வரைகிறவர்களுக்கு, பெண்களுக்குரிய மானத்தை விட்டுப் "போஸ்" கொடுக்கச் சென்றவள்! ஆனால் அது அவளுடைய வாழ்வில் ஒரே ஒரு நாள் நிகழ்ச்சி.

மானத்தைவிட மனம் துணியாமல், மறுநாளே அதை உதறி விட்டு, குமாஸ்தா வாழ்க்கையில் புகுந்து விட்டாள் அவள். எட்டு ஆண்டுகளாக பிறர் தயவின்றி, தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்கு அவளாக வளர்ந்துவிட்டவள்தான் இந்தச் சுந்தரி! யார் வேண்டும் மூர்த்தி, உங்களுக்கு? அவளா? இவளா? மயக்கும் அந்த ஜாலக்காரியா? மாண்புள்ள இந்தச் சுந்தரியா?" என்றாள் சுந்தரி. அவள் கண்களில் கண்ணீர் தேங்கியது. ஆச்சரியத்தால் வாயடைத்து நின்ற மூர்த்தி "மாண்புள்ள இந்தச் சுந்தரிதான் வேண்டும்! அவள்தானே இவள்! "என் இலட்சியக் காதலி!" என்றான். ஆனந்தக்கண்ணீர் வழிந்து ஓடியது. ★

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

★

ஏப்ரல் 28-சேலம்
,, 29-பாலக்கோடு
மே 2-தி. நகர், சென்னை
,, 4-அயனாவரம், சென்னை
,, 5-குடியேற்றம்
,, 10-மைலாப்பூர், சென்னை
,, 14-புதுப்பாக்கம், சென்னை
,, 20-கோவை
,, 21-தாராபுரம்
,, 22-மேட்டுப்பாளையம்
,, 23, 24-நீலகிரி
,, 25-வால்பாறை
ஜூன்-இராமநாதபுர மாவட்டம் - சுற்றுப் பயணம்.

முக்கிய அறிவிப்பு

பணம் அனுப்பும் ஏஜெண்டுத் தோழர்கள் 'தென்றல்' பாக்கிகளை, 'முல்லை' பாக்கியோடுஅனுப்பக்கூடாது.அதுபோல 'முல்லை'ப் பணத்தை 'தென்றல்' பணத்தோடு அனுப்பக்கூடாது. இரண்டு கணக்குகளையும் சேர்த்து அனுப்புவோரின் பணம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.'முல்லை' பாக்கி 'முல்லை-நிர்வாகி-என்ற முகவரிக்கும்' 'தென்றல்' பாக்கி 'தென்றல் நிர்வாகி - என்ற முகவரிக்குமேஅனுப்பப்படவேண்டும். இரண்டு பத்திரிகைகளுக்கும் ஒரே ஏஜெண்டானாலும் அவர்களும் மேலே கண்ட விதியை அனுசரிக்க வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் கடிதத் தொடர்பில் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு அனுப்பவும். —நிர்வாகி.

கவரி வீசிய காவலன்!

இடம்: [சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் அரண்மனையில், முரசுகட்டில் மண்டபம். வெற்றி முரசு வைக்கும் பீடத்தருகே வந்துகொண்டே புலவர் மோசிகீரனார் பேசுகிறார்.]

மோசி: தரணியாளும் சேரமானோடு நான் அமர்ந்து தங்கத் தட்டிலே அறுசுவை அமுதுண்டேன்! உணவு இனியதா? உள்ளத்திலிருந்துவந்த ஊராள்வோனின் அன்பு இனியதா? என்று என்னால் உரைக்க முடியவில்லை. மணியும் அணியும் பூண்டு, தங்க மேனியும் கொண்டு திருவே உருவான இரும்பொறை—வறுமையே வடிவமான என்னோடு சரிநிகராக அமர்ந்து உண்டான்! பிறப்பினில் ஒற்றுமை கண்டான்! அடடே! அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?...வந்தான் தமிழ்ப் புலவன் என்ற சேதி கேட்டதும், தந்தான் உயர் மரியாதை. வேல்கள் பட்டுச் சிதறி ஓடிய அந்த வீர மார்புகள், வறுமையால் பட்டுப்போன என்னையல்லவா தழுவி நின்றன?

[மண்டபத்தை சுற்றிப் பார்க்கிறார்.]

மணிக்கட்டில் யாருடையது? மன்னனுடையதோ? அணியிழைத்த இக்கட்டில் தனியாக இருப்பானேன்? இறைவனுடைய படுக்கை அறையென்றால், இதற்கு மறைவு எங்கே? திரைதான் எங்கே?

ஆம்! நெடுந்தொலைவு நடந்து வந்துள்ள நான்—இங்கு படுத்து இளைப்பாறல் குற்றமாகாது. (கொட்டாவி விட்டபடி படுத்து) இரும்பொறையா! நீ இவ்வையத்துள் உதய ஞாயிறே! உன் புகழ் வாழி!

[படுத்துத் தூங்குகிறார். இரு வீரர்கள் வருகின்றனர். புலவர் தூங்குவதைப் பார்த்து விடுகின்றனர்.]

இ. வீ: எழுப்புவோமா?

ஒ. வீ: கூடாது. எமனுலகுக்கு அனுப்புவோம். அரசரிடம் சென்று கூறுவோம், வா.

☼ ☼ ☼

[அப்போது அரசரும் வந்துகொண்டிருக்கிறார். அவரை நெருங்கிய வீரர்கள்.]

வீரன்: அரசர் பெருமானே! அக்ரமம் நடந்து விட்டது!

மன்: என்ன?

வீரன்: தெருவிலே தேடுவாரற்று தூங்கவேண்டிய ஒருவன், வெற்றி முரசு வைத்து நம் வீரர்கள் வழிபடும் கட்டிலிலே கொட்டாவி விட்டுத் தூங்குகிறான்!

மன்: (சினந்து) ஆ! யாரவன்? மூவனா? தேவனா? முனிவரிலே முதல்வனா? தூங்கவில்லை அவன். தூங்கும் நம்வீரத்தை எழுப்ப வந்திருக்கிறான். தெய்வத்தினும் மேலான-தேவாலயத்தினும் உயர்வான அவ்விடத்தை மாசுபடுத்திய அந்தத் தீயவன் எங்கே? எங்கே?

வீரன்: அங்கே! அங்கே!

மன்: மீள்வதற்கா இப்பிழை செய்தான்? இல்லை. மாள்வதற்கே! மாள்வதற்கே! (போகிறான்.)

[கட்டிலை நெருங்குகிறான் காவலன்—கையிலே உருவிய வாள் இருக்கிறது. கூர்ந்து பார்க்கிறான். சினம் தணிகிறது. வாள் தரையில் விழுகிறது.]

ஆ! என்ன பிழை செய்ய நினைத்தேன்? என்னகத்து வந்த தென்னகத்துத் தமிழ்ப்புலவன் மோசிகீரனார் அன்றோ துயில்கிறார்? தமிழ்த்தாயல்லவா தூங்குகிறாள்? துண்டிக்க வாள் எடுத்த நான் துன்மார்க்கன்! தப்பித்தேன்.

வெறிமான்! கவரி எடு! புலவர்க்கு வியர்த்துக் கொட்டுகிறது.

[கவரி-விசிறி, அதனை எடுத்து புலவர்க்கு வேந்தர் விசிறுகிறார். பின்னர், போய்விடுகிறார். தூங்கி எழுந்த புலவர்க்கு, வீரன் வெறிமான் நடந்ததைக் கூறுகிறான். முரசுகட்டிலில் தான் தூங்கியது தவறு என்பதை புலவர் பின்னால் வீரனால் அறிகிறார். வேந்தனிடம் ஓடுகிறார்.]

மோசி: குணமெனும் குன்றேறி நிற்கும் மன்னா! என் குறை பொறுத்தருள்க!

மன்: பெருமானே! என்ன பிழை செய்தீர்?

மோசி: முரசுகட்டிலில் நான் படுத்தது குற்றம். அதற்குத் தண்டனை, தாங்கள் வாளால் என் தாள் போக்கியிருக்க வேண்டும்!

மன்: தமிழையா தண்டிக்கச் சொல்லுகிறீர்? புகழுக்கு இழுக்கு வந்தால் பொறுப்பேன்; என் தமிழுக்கு—அந்தத் தமிழை வளர்க்கும் தங்களுக்கு தீங்குசெய்யத் துணியேன்! எவர் செய்திடினும் விடேன்! முரசு அமரும் இடத்திலே முத்தமிழ் ஏறியது குற்றமாகாது. வருந்தற்க!...

புல: மன்னா! இன்னா செய்தார்க்கும் கவரி வீசி—இனியது செய்த நின் தமிழ் நெஞ்சம்—எரிசூரியனினும் பெரியது! விரிகடலினும் ஆயுள் பெற்றது! கவரி வீசிய காவலா! நீ செந்தமிழ்க்கோர் தேர்ப்பாகன்—என் போன்றோர்க்கோர் வள்ளல் பேகன்! வாழ்க நின் புகழ்!

—கோ. இறைமுடிமணி.

"என்னடா வரதா! நேத்திக்கி ஆத்தண்டெ வந்துருந்தயாமே? என்ன சமாசாரம்?"

"ஒண்ணுமில்லே அத்திம்பேர்! மயிலாப்பூர்லே நம்ப 'ராமமூர்த்தி' பேசினுர். அழச்சுண்டு போகலான்னு வந்திருந்தேன். அடாடா! என்னு பேச்சு என்னு பேச்சு! பொழிஞ்சு தள்ளிட்டார்!"

"என்னடா பேசுனுர்?"

"தி. மு. க. கூட ஜாதி சொல்லித்தான் ஓட்டுக் கேட்டுதாம். கண்ணதாசன், தன்னை நாராயணன் செட்டியார்னு சொல்லிண்டுதான் ஓட்டுக் கேட்டாராம். ராசேந்திரன் தன்னை தேவர்னு சொல்லித்தான் கேட்டாராம். இதெ சொன்னுரோன்னே, ஒடனே "வெட்கம் வெட்கம்"னு ஏழுபேரும் கத்தினு!"

"மயிலாப்பூரிலேயா?"

"ஆமா, அத்திம்பேர்!"

"வெட்கம், மயிலாப்பூர்லே கூட இருக்கா?"

"என்ன அத்திம்பேர் இப்புடிக் கேட்டுட்டேள். என்ன இருந்தாலும், ஆயிரந்தாங் கம்யூனிஸ்ட் ஆனுலும் 'ராமித்தி' நம்ப ஆளோன்னே? அவருக்கும் மானம்னு ஒன்னு இருக்கறதா நாம்ப ஒத்துண்டு ஆகணுமே!"

"ஆமடா, வரதா! நாகப்பட்டனத்துலெ, இதே 'ராமித்தி' குன்னியூர் மாமாவண்டையும், மாவூர் மாமாவண்டையும் தான் 'டசசு' வச்சுண்டு 'ஓர்க்' பண்ணுனதா அவா சொல்றுளே?"

"அதுக்குத்தான் அத்திம்போர், இவர் ஒரு போடுபோட்டார். இல்லேன்னு, இந்தப் பெரிய பொய் சொல்லவேண்டிய அவசியம் என்ன வந்துது? தேனியிலெ ராசேந்திரன் தேவர்னு சொல்லிண்டதா சொல்றுரே, சொந்த ஊர்லெ சொல்லியாதெரியணும்? கண்ணதாசன் தொகுதி அவர் சொந்த ஊர்த் தொகுதிதானே அத்திம்பேர்! அங்கெ போயி அவரு செட்டியார்னு சொல்லியா தெரியணும்? அவாள்லாம் சொல்லிண்டதா சொல்றுரே, பின்னெ எதுக்கு அத்திம்பேர்!"

"அதாண்டா, சூத்ராள் ஒரு பழமொழி சொல்வாளே, அவுசாரியை அவுசாரின்னு, அவ சமுசாரியையும் அவுசாரிம்பாளாம்!"

"என்ன அத்திம்பேர்! நீ நம் அவா கூட சேந்துண்டு பேசறீர்! இப்புடியெல்லாம் சொல்லித்தா அத்திம்பேர் அவாளை ஒழிக்க முடியும்! கம்யூனிசத்துக்கு தி. மு. க. எதிரின்னு, ராமமூர்த்தி அவாளை ஏசருர்! இல்லியே! நம்பளவாளுக்கு எதிரின்னுதான் சொல்றுர்! கம்யூனிஸ்டுக் கட்சிக்குள்ளேயே ஜீவானந்தத்தையெல்லாம் மூச்செப்புடிச்சு அமுக்கிட்டு, நம்பளவாளா வச்சுட்டாரோன்னே!"

"அது சரிடா வரதா! இனி நாம்ப தி. மு. கவை எதிரியா மதிக்கக்கூடாதுடா! அவாளாம் நியாயமான வழிக்குத் தாராயிட்டா. ராமமூர்த்தியெல்லாம் பதவின்னு வந்துட்டா, எங்கயாவது போயிடுவன்!"

"எங்கெ போனுலும் நம்பளவாளை மறக்கமாட்டார் அத்திம்பேர்!"

"சரிடா! நா வர்றேன்!"

"நல்லது போய்ட்டு வாங்கோ அத்திம்பேர்!"

★

கம்யூனிச ஆத்மார்த்தம்!

கம்யூனிஸ்ட் நாம சங்கீர்த்தனம்...

கோவிந்தா! கோவிந்தா!

புல்கானின் நாம சங்கீர்த்தனம்...

கோவிந்தா! கோவிந்தா!

ஹங்கேரி நாம சங்கீர்த்தனம்...

கோவிந்தா! கோவிந்தா!

அணுகுண்டு சோதனை சிந்தா பாத்...

பாத் பாத்! பாத் பாத்!

(பாரதியின் 'காதல் காதல்' மெட்டு)

ரஷ்யா! ரஷ்யா! ரஷ்யா!

ரஷ்யாவை நாம் காப்போம் வாராய்

சிஷ்யா! சிஷ்யா! சிஷ்யா!

குருஷேவ்! குருஷேவ்! குருஷேவ்!

குருஷேவுக்குத் தாடி முளைத்தால்

ஒரு ஷேவ்! ஒரு ஷேவ்! ஒரு ஷேவ்!

மாஸ்கோ! மாஸ்கோ! மாஸ்கோ!

மாஸ்கோவுக்கோர் இளைப் புண்டாயின்

கிளாஸ்கோ! கிளாஸ்கோ! கிளாஸ்கோ!

★

எட்டடி!

செய்தி: நிலமற்றோருக்கு நில மளிக்க, சங்கரன் நம்பூதிரிபாட் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் மந்திரிசபை முயற்சி செய்கிறது.

குறிப்பு: கம்யூனிஸ்டு நாடுகளில் நடப்பது போலவே, எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் தலைக்கு 'எட்டடி' நிலம் விநியோகிக்க முயற்சிகள் நடக்கின்றன!

★

பாதி பாதி!

ஒரே ஆளைத் திரும்பத் திரும்ப நிறுத்துவது ஜனநாயகத்துக்கு விரோதம் என்பதால் ஜனதிபதி தேர்தலில் கலந்துகொள்வதில்லை யென கம்யூனிஸ்டுகள் முடிவு செய்துவிட்டார்கள்.

—பத்திரிகைச் செய்தி.

சர்வாதிகாரி தேர்தல் நடத்தினுல் ஹங்கேரியில் கொல்லப்பட்ட இருபத்தையாயிரம் மக்கள் மீது ஆணையாக கம்யூனிஸ்ட கட்சி, அதில் கலந்துகொள்ளும்.

—வராத பாதி.

-வணங்காமுடி.

இயற்கை எய்தினுர்!

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் செயலாளர் தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் தாயார் **திருமதி ஆச்சிக்கண்ணு அம்மையார்** அவர்கள் 21-4-57 ஞாயிறு மாலை 4 மணி அளவில் 56 வயதில் இயற்கை எய்தினுர்கள். 22-4-57 திங்கள் மாலை 4 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. அதுபோழ்து திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பாக துணைச்செயலாளர் தோழர் ஜி. பராங்குசம் அவர்களும், நகர கழகத்தின் சார்பாக திரு. நடராசன் அவர்களும் மலர் மாலை அணிவித்து இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர். திருச்சி மாவட்டத்திலிருந்தும் மற்ற பகுதிகளிலிருந்தும் ஏராளமான கழகத் தோழர்களும் உறவினர்களும் நண்பர்களும் புடைசூழ சவ ஊர்வலம் 'மயானம்' அடைந்து இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

தாயைப் பிரிந்து வருந்தும் தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கும் நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ-ர்)

அடுத்த தொடர் கதை!

சேரநாட்டுச் செல்விழியாளின்
காதல் சித்திரம்

ஆசிரியர் **கண்ணதாசன்**

எழுதுகிருர்

விரைவில் ஆரம்பமாகிறது!

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.